# <u>பெரியகுளம் நகராட்சி</u>

## <u>சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு அறிவிப்பு</u>

ந.க..எண். 570/2022/அ1 நாள்: 11.04.2022.

1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 81 A, அரசாணை எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி–4) துறை, நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்.1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் வழிவகை செய்யப்பட்டதன் அடிப்படையில் பெரியகுளம் நகராட்சியின் நகர்மன்றத் தீர்மான எண்.28, நாள்.11.04.2022–ன்படி 01.04.2022 முதல் சொத்துவரி பொதுசீராய்வின்படி, கீழ்க்கண்டவாறு சொத்துவரி மற்றும் காலிமனைவரி உயர்வு செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### <u>தற்போதுள்ள வரிவிதிப்புகளுக்கான உயர்வு விபரம்</u>

1. 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு ஏற்கெனவே உள்ள சொத்துவரியில் 25% உயர்வு செய்யப்படும்.
2. 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு ஏற்கெனவே உள்ள சொத்துவரியில் 50% உயர்வு செய்யப்படும்.
3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு ஏற்கெனவே உள்ள சொத்துவரியில் 75% உயர்வு செய்யப்படும்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு ஏற்கெனவே உள்ள சொத்துவரியில் 100% உயர்வு செய்யப்படும்.
5. வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% உயர்வு செய்யப்படும்.
6. தொழிற்சாலை பயன்பாடு கட்டிடம் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% உயர்வு செய்யப்படும்.
7. சொத்துவரியானது ஆண்டு வருடாந்திர வாடகை மதிப்பில் 18.75 சதவீதமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
8. காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போது உள்ள அடிப்படை மதிப்பு 100 சதவிதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்படும்.
9. மேற்கூறிய உயர்வின் அடிப்படையில் மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்து, இனிவருங்காலங்களில் சொத்து வரி மற்றும் காலிமனை வரி நிர்ணயம் செய்யப்படும்.
10. திருத்தியமைக்கப்பட்டுள்ள வார்டு மறுவரையறையின்படி, புதிய வார்டுகள் வாரியாக மண்டலங்கள் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | மண்டலம் | வார்டு மறுவரையறையின்படி தற்போது நிர்ணயம் செய்யப்படும் தெருக்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | A | 25 |
| 2. | B | 148 |
| 3. | C | 16 |

அரசாணையின்படி, சொத்துவரி பொது சீராய்வின்படி, சொத்துவரி மற்றும் காலிமனைவரி உயர்வு தொடர்பான ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின் இவ்வறிவிப்பு பிரசுரிக்கப்பட்ட நாள் முதல் **30** தினங்களுக்குள் எழுத்துப்பூர்வமாக நேரிலோ, தபால் மூலமாகவோ, மின்னஞ்சல் (commr.periyakulam@tn.gov.in) மூலமாகவோ நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்க தெரிவிக்கப்படுகிறது. மேலும் தொடர்புடைய அரசாணை, சுற்றறிக்கை, நகர்மன்றத் தீர்மானம் மற்றும் சுயமதிப்பீட்டுப் படிவம் நகராட்சியின் வலைதளத்தில் (https://www.tnurbantree.tn.gov.in/periyakulam/ பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. கூடுதல் விபரங்கள் வலைதளத்தில் பதிவிறக்கம் செய்தோ அல்லது அலுவலகத்தில் நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

(ஒம்). கி. புனிதன்
ஆணையாளர்
பெரியகுளம் நகராட்சி

---

ஆணையாளர்,
பெரியகுளம் நகராட்சி. 11/4/22